உ

கணபதிதுணை.

14618

# ளயார்கதை.

(2798)



கலாநிதியந்திரசாலை.

பருத்தித்துறை.

விலை சதம் ௧௫.

1927.

தருமாலயவெளியீடு இலக்கம் ௬.

உ

சிவமயம்.

ஸ்ரீ

அ. வரதபண்டிதரவர்கள்

இயற்றிய

# பிள்ளையார் கதை.

இது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை

பிரமஸ்ரீ.

ச. சுப்பிரமணியசாஸ்திரிகளால்

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

உ

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

செந்தமிழ்முனிவன் செப்பியகாதையுங்
கந்தபுராணக் கதையிலுள்ளதுவு
மிலிங்கபுராணத் திருந்தநற்கதையு
முபதேசகாண்டத் துரைத்தநற்கதையுந்
தேர்ந்தெடுத்தொன்றாய்த் திரட்டியையங்காற்கு
வாய்ந்தநல்விரத மான்மியமுரைத்தான்
கன்னியங்கமுகிற் கயலினங்குதிக்குந்
துன்னியவளவயற் சுன்னாகத்தோ
னரங்கநாத னளித்தருள்புதல்வன்
திரம்பெறுமுருகனைத் தினந்தொறும்
வரம்பெறவணங்கும் வரதபண்டிதனே.

# பிள்ளையார் கதை.

## காப்பு.

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவு மேன்மே—லருந்திக்
குணமுடைய ராயிருந்து குற்றங்க டீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்று னீன்றருளு மைந்தா—முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவே
னென்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர்துதி.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—மொருவாக்கு
மாதலால் வானோர்க ளானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும்—பெற்றதொரு
தன்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தி லெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி.

எள்ளுப்பொரிதேனவலப்ப மிக்கும்பயறு மிளநீரும், வள்ளிக்கிழங்குமாம்பழமும் வாழைப்பழமும்பலாப்பழமும், வெள்ளைப்பாலுமோதகமும் விரும்பிப்படைத்தேன்சந்நிதியிற், கொள்ளைக்கருணைக்கணபதியே கொட்டியருள்கசப்பாணி.

சண்டப்பெருச்சாளியேறிச் சடைக்கொண்டிவைய
த்துலாவி, யண்டத்தமரர்துதிக்க வடியார்க்கருளும்பிரா
னே, எண்டிக்குமன்பர்கள்பார்க்க விணையற்றபேரொளிவீ
சக், குண்டைக்கணபதிநம்பிகொடுங்கைபாற்சப்பாணிகொ
ட்டே.

## சரஸ்வதி துதி.

புத்தகத்துள்ளுறைமாதே பூவிலமர்ந்திடுவாழ்வே வித்
தகப்பெண்பிள்ளாய்நங்காய் வேதப்பொருளுக்கிறைவி, முத்
துக்குடையுடையாளே மூவுலகுந்தொழுதேத்துஞ் செப்பு
க்கமலையாளே செவ்வரியோடியகண்ணாய், தக்கோல
...வம்வாயாய் சரஸ்வதியென்னுந்திருவே எக்காலமுமு
...த்தொழுவே னியலிசைநாடகமென்னும், முத்தமிழ்க்
கல்விகளெல்லா முழுதுமெனக்கருள்செய்தென் சித்தந்தனி
லிருந்து திருவருள்செய்திடுவாயே.

## அதிகாரம்.

பொன்னிறங்கடுக்கும் புனற்செறிகுடுமித்
தென்மலையிருந்த சீர்சால்முனிவன்
கந்தமும்மதக் கரிமுகன்கதைதனைச்
செந்தமிழ்வகையாற் றெளிவுறச்செப்பின
னன்னதிற்பிறவி லிறபத்திரட்டித்
தொன்னெறிவிளங்கச்சொல்லுவன்கதையே.

## கதை.

மந்தரகிரியில் வடபாலாங்கோ
ரிந்துதவழ்சோலை யிராசமாநகரியி
லந்தணனொருவனு மாயிழையொருத்தியுஞ்
சுந்தரப்புதல்வனைப் பெறுதல்வேண்டிக்
கடவுளாலயமுங் கடிமலர்ப்பொய்கையுந்
தடநிழற்பள்ளியுந் தாம்பலசமைத்துப்
புதல்வனைத்தருகெனப் பொருப்பரசீன்ற
மதர்விழிபாகனை வழிபடுநாளின்
மற்றவர்புரியு மாதவங்கண்டு
சிற்றிடையுமையாள் சிவனடிவணங்கிப்

பரனேசிவனே பல்லுயிர்க்குயிரே
யரனேமறையவர்க் கருள்புரிந்தருளென
அந்தவந்தணனுக் கிந்தநற்பிறப்பின்
மைந்தரில்லையென்று மறுத்தரனுரைப்ப
எப்பரிசாயினு மெம்பொருட்டொருசுதன்
றப்பிலாமறையோன் றனக்கருள்செய்கென
வெம்மையாளுடைய வுமையாண்மொழிய
விமையாமுக்க ணிறைவன்வெகுண்டு
பெண்சொற்கேட்டல் பேதைமையென்று
பண்சொற்பயிலும் பாவையைநோக்கிப்
பேதாய்நீபோய்ப் பிறவெனமொழிய
மாதுமையவளு மனந்தளர்வுற்றுப்
பொன்றிடுமானுடப் புன்பிறப்பெய்துதல்
நன்றலவென்றே நடுக்கமுற்றுரைப்பக்
கறைமிடற்றண்ணல் கருணைகூர்ந்து
பிறைநுதலவற்குநீ பிள்ளையாகச்
சென்றவண்வளர்ந்து சிலபகற்கழிந்தால்
மன்றல்செய்தருள்வோம் வருந்தலையென்று
விடைகொடுத்தருள விலங்கன்மாமகளும்
பெடைமயிற்சாயற் பெண்மகவாகித்
தார்மலிமார்பன் சதுர்மறைக்கிழவன்
சிர்மலிமனைவி திருவயிற்றுதித்துப்
பாவையுஞ்சிற்றிலும் பந்தொடுகழங்கும்
யாவையும்பயின்ற வியல்பினளாகி
ஐயாண்டடைந்தபி னன்னையுமத்தனு
மையார்கருங்குழல் வாணுதறன்னை
மானுடமறையோற்கு வதுவைசெய்திடக்
கானமர்குழலியைக் கருதிக்கேட்பப்
பிறப்பிறப்பில்லாப் பெரியோற்கன்றி
யறத்தகுவதுவைக் கமையேன்யானென
மற்றவன்றன்னையுன் மணமகனைப்
பெற்றிடலரிதெனப் பெயர்ந்தவர்பேச
அருந்தவமுயற்சியா லணுகுவேனியானெனக்
கருந்தடநெடுங்கட் கவுரியங்குரைப்ப

[illegible]

சண்டப்பெருச்சாளியேறிச் சடைக்கொண்டுவையத்துலாவி, யண்டத்தமரர்துதிக்க வடியார்க்கருளும்பிரானே, என்டிக்குமன்பர்கள்பார்க்க வினையற்றபேரொளிவிசக், குண்டைக்கணபதிநம்பிகொடுங்கையாற்சப்பாணிகொட்டே.

## சரஸ்வதி துதி.

புத்தகத்துள்ளுறைமாதே பூவிலமர்ந்திடுவாழ்வே வித்தகப்பெண்பிள்ளாய்நங்காய் வேதப்பொருளுக்கிறைவி, முத்துக்குடையுடையாளே மூவுலகுந்தொழுதேத்துஞ் செப்புக்கமுலையாளே செவ்வரியோடியகண்ணாய், தக்கோல [illegible]னும்வாயாய் சரஸ்வதியென்னுந்திருவே எக்காலமுமு[illegible]த்தொழுமேவ னியலிசைநாடகமென்னும், முத்தமிழ்க் கல்விகளெல்லா முழுதுமெனக்கருள்செய்தென் சித்தந்தனிலிருந்து திருவருள்செய்திடுவாயே.

## அதிகாரம்.

பொன்னிறங்கடுக்கும் புனற்செறிகுடுமித்
தென்மலையிருந்த சீர்சான்முனிவன்
கந்தமும்மதக் கரிமுகன்கதைதனைச்
செந்தமிழ்வகையாற் றெளிவுறச்செப்பின
னன்னதிற்பிறவி லரிறபத்திரட்டித்
தொன்னெறிவிளங்கச்சொல்லுவன்கதையே.

## கதை.

மந்தரகிரியில் வடபாலாங்கோ
ரிந்துதவழ்சோலை யிராசமாநகரியி
லந்தணனொருவனு மாயிழையொருத்தியுஞ்
சுந்தரப்புதல்வனைப் பெறுதல்வேண்டிக்
கடவுளாலயமுங் கடிமலர்ப்பொய்கையுந்
தடநிழற்பள்ளியுந் தாம்பலசமைத்துப்
புதல்வரைத்தருகெனப் பொருப்பரசின்ற
மதர்விழிபாகனை வழிபடுநாளின்
மற்றவர்புரியு மாதவங்கண்டு
சிற்றிடையுமையாள் சிவனடிவணங்கிப்

பரனேசிவனே பல்லுயிர்க்குயிரே
யரனேமறையவர்க் கருள்புரிந்தருளென
அந்தவந்தணனுக் கிந்தநற்பிறப்பின்
மைந்தரில்லையென்று மறுத்தரனுரைப்ப
எப்பரிசாயினு மெம்பொருட்டொருசுதன்
றப்பிலாமறையோன் றனக்கருள்செய்கென
வெம்மையாளுடைய வுமையாண்மொழிய
விமையாமுக்க ணிறைவன்வெகுண்டு
பெண்சொற்கேட்டல் பேதைமையென்று
பண்சொற்பயிலும் பாவையைநோக்கிப்
பேதாய்நீபோய்ப் பிறவெனமொழிய
மாதுமையவளு மனந்தளர்வுற்றுப்
பொன்றிடுமானுடப் புன்பிறப்பெய்துதல்
நன்றலவென்றே நடுக்கமுற்றுரைப்பக்
கறைமிடற்றண்ணல் கருணைகூர்ந்து
பிறைநுதலவற்குநீ பிள்ளையாகச்
சென்றவண்வளர்ந்து சிலபகற்கழித்தால்
மன்றல்செய்தருள்வோம் வருந்தலையென்று
விடைகொடுத்தருள விலங்கன்மாமகளும்
பெடைமயிற்சாயற் பெண்மகவாகித்
தார்மலிமார்பன் சதுர்மறைக்கிழவன்
சீர்மலிமனைவி திருவயிற்றுதித்துப்
பாவையுஞ்சிற்றிலும் பந்தொடுகழங்கும்
யாவையும்பயின்ற வியல்பினளாகி
ஐயாண்டடைந்தபி னன்னையுமத்தனு
மையார்கருங்குழல் வாணுதறன்னை
மானுடமறையோர்க்கு வதுவைசெய்திடக்
கானமர்குழலியைக் கருதிக்கேட்பப்
பிறப்பிறப்பில்லாப் பெரியோர்க்கன்றி
யறக்கருவதுவைக் கமையேன்யானென
மற்றவன்றன்னையுன் மணமகனைக்
பெற்றிடலரிதெனப் பெயர்ந்தவர்பேச
அருந்தவமுயற்சியா லணுகுவேனியானெனக்
கருந்தடநெடுங்கட் கவுரியங்குரைப்ப

மருமலிகமல மலர்த்தடத்தருகிற்
றருநிழற்றருந்தவச் சாலையதமைத்துப்
பணியணிபற்பல பாங்கியர்சூழ
அணிமலர்க்குழலுமை யருந்தவம்புரிதலு
மரிவைதனருந்தவ மறிவோம்யாமென
விருவருமறியா விமையவர்பெருமான்
மானிடமேந்தும் வண்ணமதொழித்து
மானுடயோக மறையவனாகிக்
குடையொடுதண்டுநற் குண்டிகைகொண்டு
மடமயிறவம்புரி வாவிக்கரையிற்
கண்ணுதல்வந்து கருணைகாட்டித்
தண்ணறுங்கூந்தற் றையலைநோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய்நீ
யென்பெறத்தவமிங் கியற்றுவதென்றலுங்
கொன்றைவார்சடையனைக் கூடவென்றுரைத்தலு
நன்றெனச்சிரித்து நான்மறையோனு
[illegible]ாட்டினிலேறி மான்மழுத்தரித்துக்
காட்டினிற்சுடலையிற் கணத்துடனாடிப்
பாம்புமெலும்பும் பஃறலைமாலையுஞ்
[illegible]மணிந்து தலையோடேந்திப்
[illegible]கொண்டுழலும் பித்தன்றன்னை
நச்சிநீர்செய்தவு நகைதருநுமக்கெனப்
பூங்கொடியருந்தவம் பூசுரன்குலைத்தலு
மாங்கவனுமுற் றணிமனைபுகுதச்
சேடியர்வந்து செழுமலர்க்குழலியை
வாடுதலொழிகென மனமிகத்தேற்றிச்
சிந்துரவானுதற் சேடியர்சிலர்போய்த்
தந்தைதாயிருவர் தாளிணைவணங்கி
வாவிக்கரையில் வந்தொருமறையோன்
பாவைதன்செங்கையைப் பற்றினனென்றலுந்
தோடலர்கமலத் தொடைமறைமுனியை
யாடகமாடத் தனிமனைக்கொணர்கென
மாடகயாழ்முரல் மங்கையரோடி
நீடியபுகழாய் நீயெழுந்தருளென

# பிள்ளையார்கதை

தவமுறைமுனிவனைத் தாளிணைவணங்கித்
தேனமர்குழலி திருமுகநோக்கி
மோனமாமுனிபுன் முறுவல்காட்டிக்
கற்றைச்சடையுங் கரமொருநான்கு
நெற்றியினயனமு நீலகண்டமு
மானுமழுவு மலர்க்கரத்திலங்கக்
கூன்மதிநிலவுங் கொழித்திடுமுடிமேல்
வரந்தருமுதல்வன் மடமயில்காளைக்
கரந்ததன்னுருவங் காட்டிமுன்னிற்ப
மரகதமேனி மலைமகடானும்
விரைவொடங்கவனடி வீழ்ந்திறைஞ்சினளை
யரியயனிந்திர னமரர்விஞ்சையர்
கருடர்கின்னரர் காயவாசியர்
ஏதமில்முனிவ ரவுணரிராக்கதர்
பூதரியக்கர்கிம் புருடரலகை
சித்தர்தாரகைகந் தருவர்கள்முதலாய்க்
கணிக்கரும்பதினெண் கணத்திலுள்ளவரு
மணிக்கருங்களத்தனை வந்தடைந்ததற்பின்
மன்றலங்குழலிக்கு வதுவைநாட்குறித்துத்
தென்றல்வந்திலங்கு முன்றிலகத்துப்
பொன்றிகழ்பவளப் பொற்காணட்டி
மாணிக்கத்தால் வளைபலபரப்பி
யாணிப்பொற்றகட்டா லழகுறவேய்ந்து
நித்திலமாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகடோறும் பலமணிபதித்துத்
தோரணநாட்டித் துகில்விதானித்துப்
பூரணப்பொற்குடம் பொலிவுறவைத்துத்
திக்குத்தோறுந் திருவிளக்கேற்றிப்
பத்திப்படர்முளைப் பாலிகைபரப்பிக்
கன்னலுங்கமுகுங் கதலியுநாட்டிப்
பன்மலர்நாற்றிப் பந்தர்சோடித்து
நலமிகுகைவலோர் நஞ்சணிமிடற்றனைக்
குலவியதிருமணக் கோலம்புனைந்தார்
வருசுரர்மகளிர் மலைமகடன்னைக்

# பிள்ளையார்கதை.

மைம்மலர்க்குழலி வந்தெனையழைக்கி
லம்மனைபுகுவனென் றந்தணனுரைத்தலும்
பொற்றொடிநீபோய்ப் பொய்கையினின்ற
நற்றவமுனியை நடாத்திக்கொணர்கெனச்
சிவனையிகழ்ந்த சிற்றறிவுடையோ
னவனையான்சென் றிங் கழைத்திடேனென்று
சிற்றிடைமடந்தையுஞ் சீறினளாகி
மற்றையமாதர் மதிமுகநோக்கி
நெற்றியிற்கண்ணுடை நிமலனுக்கல்லதென்
பொற்பமர்கொங்கை பொருந்துதற்கரிதால்
மரீனுடவேட மறையவன்றனக்கு
யான்வெளிப்படுவ தில்லையென் றிசைப்ப
மனையிடைவந்த மாமுனிதன்னை
யிணையடிதொழுத லிளையோர்க்கியல்பெனத்
தந்தையுந்தாயுந் தகைபெறமொழியச்
சிந்தைகுளிர்ந்து சீறுதலொழிந்து
தாய்சொன்மறுத்தல் பாவமென் றஞ்சி
யாயிழைதானு மவனெதிர்சென்று
சுற்றிவந்தவனடி சுந்தரிவணங்கி
மற்றவன்றன்னை மனையிற்கொணர்ந்து
ஆதியம்பகவற் கன்பனுகும்
வேதியன்பழைய விருத்தனென் றெண்ணி
யாசனநல்கி யருக்கியமுதலாப்
பாதபூசனைகள் பண்ணியபின்னர்ப்
போனகம்படைத்துப் பொரிக்கறிபருப்புநெய்
யான்பால்மாங்கனி யழகியபலாச்சுளை
தேன்கதலிப்பழஞ் சீர்பெறப்படைத்து
அந்தணன்றன்னை யமுதுசெய்வித்துச்
சந்தனங்குங்குமச் சாந்திவைகொடுத்துத்
தக்கோலத்தொடு சாதிக்காயும்
கர்ப்பூரத்தொடு கவின்பெறக்கொண்டு
வெள்ளிலையடைக்காய் விளங்கியபொன்னி
னொள்ளியதட்டி லுகந்துமுன்வைத்துச்
சிவனெனப்பாவனை செய்துநினைந்து

## தத்துவஞானத்திருவகவல்.

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெருநுதிக்கோடும்
வேழமுகமும் வெண்ணீற்றணியு
மஞ்சுகரமு மங்குசபாசமு
நெஞ்சிற்குடிகொளு நீலமேனியு
நான்றவாயு நாலிருபுயமு
மூன்றுகண்ணு மும்மதயாறு
மிரண்டுசெவியு மிலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூற் திருமார்பகமும்
பொற்புறவிளங்கும் பொருளேகயிலை
யற்புதனீன்ற கற்பகக்களிறே
முப்பழநுகரு மூஷிகவாகன
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கையறுத்துத்
திருந்தும்முதலஞ் செழுத்தையுங்காட்டிப்
பொருந்தியவெனது புன்மனம்புகுந்து
வாடாவண்ணம் வந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்து
தெவிட்டாப்போதஞ் செப்பியென்செவியி
லுவட்டாஞானத் தண்மையுங்காட்டி
யைம்புலன்றன்னை யடக்குமுபாயமு
மின்புறுகருணையு மெனக்கினிதருளித்
தலமொருமூன்றுந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமுமறுத்தே
யொன்பதுவாயி லொருமந்திரத்தா
லன்புலகதவை யடைப்பதுங்காட்டி
யாறுதாரத் தங்குளநிலையைப்
பேறுநிறுத்திப் பேச்சுரையறுத்தே
யிடைபிங்கலையி னெழுத்தறிவித்துக்
கடையிற்சுழுமுனைக் கபாடங்காட்டி

ஔவியமில்லா தவனேசெயசெய
அ,ஃகரவணிந்த வாதிசெயசெய
கண்மூன்றுடைய களிறேசெயசெய
ஙப்போன்மழுவொன் றேந்தீசெயசெய
சங்கரன்றேரச் சறுத்தாய்செயசெய
ஞயமுடைவித்தக நம்பீசெயசெய
இ,டமுடைவிக்கி னேசுராசெயசெய
இ,ணங்கியவன்பர்க் கினியாய்செயசெய
தத்துவமுறைதரு சாமீசெயசெய
நன்னெறிவித்தக நம்பீசெயசெய
பகீரதிக்கினிய பாலாசெயசெய.
மன்றுளாடி மகனேசெயசெய
இ,யக்கரைக்களையு மிறைவாசெயசெய
அ,ரவக்கிங்கிணி யணிவாய்செயசெய
இ,லகக்கொம்பொன் றேந்திசெயசெய
வஞ்சனப்பழவினை மாற்றுவாய்செயசெய
அ,ழகியவேலுக் கண்ணாசெயசெய
இ,ளமதயானை முகத்தாய்செயசெய
இ,றக்கரி* சாடு மிறைவாசெயசெய
அ,னந்தலாடு மரசேசெயசெய
கரமைந்துடைய கணபதிசெயசெய
காமன்பகைவன் காதலசெயசெய
கிரியிற்பாரதந் தீட்டினாய்செயசெய
கீழ்மையொழித்துக் கிளர்வாய்செயசெய
குண்டப்பண்டிக் குருவேசெயசெய
கூறியமும்மதக் கோவேசெயசெய
கெண்டையங்கண் ணுமை மகனேசெயசெய
கேதாரப்பிரிய மானாய்செயசெய
கையிற்சக்கர முடையாய்செயசெய
கொவ்வைக்கனிவாய் மதலாய்செயசெய
கோலக்குடநிகர்வயிற்றாய்செயசெய
கௌவைப்பழவினை தீர்ப்பாய்செயசெய.

---

ம. *கரி-கயமுகாசுரன்.

திருமணக்கோலஞ் செய்தனராங்கே
யெம்பிரானையு மிளங்கொடிதன்னையு
மும்பரெல்லா மொருங்குடன்கூடிக்
கடலெனவிளங்குங் காவணந்தன்னிற்
சுடர்விடுபவளச் சுந்தரப்பலகையின்
மறைபுகழ்ந்தேத்த மகிழ்ந்துடனிருத்திப்
பறையொலியோடு பணிவளையார்ப்ப
வதுவைக்கேற்ற மறைவிதிநெறியே
சதுர்முகனோமச் சடங்குகளியற்றத்
தழலெனவிளங்குந் தாலிபூட்டிச்
சிறுமதிநுதலியைச் சிவன்கைப்பிடித்தபி
னரிவலஞ்சூழ வெரிவலம்வந்து
பரிவுடன்பரிமளப் பாயலில்வைகிப்
போதணிகருங்குழற் பூவைதன்னுடனே
யோதநீர்வேலைசூ ழுஞ்சையம்பதிபுக
ஏரார்வழியி னெண்டிசைதன்னைப்
பாராதேவா பணிமொழிநீயென
வருங்கருங்குழலாண் மற்றுமுண்டோவெனத்
திருந்திழைமடந்தை திரும்பினள்பார்க்கக்
களிறும்பிடியுங் கலந்துவிளையாடல்கண்
டொளிர்மணிப்பூணு ளரவோனுடனே
யிவ்வகையாய்விளை யாடுவோமீங்கென
வவ்வகையரனு மதற்குடன்பட்டு
மதகரியுரித்தோன் மதகரியாக
மதர்விழியுமைபிடி வடிவமதாகிக்
கூடியகலவியிற் குவலயம்விளங்க
நீடியவானோர் நெறியுடன்வாழ
வந்தணர்சிறக்க வானினம்பெருகச்
செந்தழல்வேள்விவே தாகமஞ்சிறக்க
வறம்பலபெருக மறம்பலசுருங்கத்
திறம்பலவரசர் செகதலம்விளங்க
வெங்கரிமுகமும் வியன்புழைக்கையோ
டைங்கரதலமு மலர்ப்பதமிரண்டும்
பவளத்தொளிசேர் பைந்துவர்வாயுந்

தவளக்கிம்புரித் தடமருப்பிரண்டுங்
கோடிசூரியர்போற் சுலவிடுமேனியும்
பேழைபோலகன்ற பெருங்குடவயிறும்
நெற்றியினயனமு முப்புரிநூலுங்
கற்றைச்சடையுங் கனகநீண்முடியுந்
தங்கியமுறம்போற் றழைமடிச்செவியுமா
யைங்கரத்தண்ணல்வந் தவதரித்தலும்
பொங்கரவணிந்த புண்ணியமூர்த்தியு
மங்கையுமனமது மகிழ்ந்துடனோக்கி
விண்ணுளோர்களும் விரிந்தநான்முகனு
மண்ணுளோர்களும் வந்தனைவணங்க
வாங்கவர்தங்கட் கருள்சுரந்தருளித்
தீங்கதுதீர்த்துச் செந்நெறியளித்துப்
பாரணமாகப் பலகனியருந்தி
யோரணியாலின் கீழினிதிருவெனப்
பூதலந்தன்னிற் புதல்வனையிருத்திக்
காதல்கூர்மடநடைக் கன்னியுந்தானு
மைவளர்சோலை மாநகர்புகுந்து
தெய்வநாயகன் சிறந்தினிதிருந்தபின்
வானவராலு மானுடராலுங்
கானமர்கொடிய கடுவிலங்காலுங்
கருவிகளாலுங் காலனாலு
மொருவகையாலு முயிரழியாமற்
றிரம்பெறமாதவஞ் செய்துமுன்னாளில்
வரம்பெறுகின்ற வலிமையினாலே
யைம்முகச்சீயமோத் தடற்படைசூழக்
கைம்முகம்படைத்த கயமுகத்தவுணன்
பொன்னுலகழித்துப் புலவரைவருத்தி
யிந்நிலத்தவரை யிடுக்கண்படுத்திக்
கொடுந்தொழில்புரியுங் கொடுமைகண்டேங்கி
யடுந்தொழிற்குலிசத் தண்ணலுமமருங்
கறைபடுகண்டக் கடவுளைப்போற்றி
முறையிடக்கேட்டு முப்புரமெரித்தோ
னஞ்சலீரென்றவர்க் கபயங்கொடுத்தே

வஞ்சுகைக்கரிமுகத் தண்ணலைநோக்கி
யானைமாமுகத் தவுணனோடவன்றன்
சேனைகள்முழுவதுஞ் சிந்திடப்பொருது
குன்றுபோல்வளர்ந்த குறட்படைகூட்டி
வென்றுவாவென்று விடைகொடுத்தருள
வாங்கவன்றன்னோ டமர்பலவுடற்றிப்
பாங்குறுமவன்படை பற்றறக்கொன்றபின்
தேர்மிசையேறிச் சினங்கொடுசெருவிற்
கார்முகம்வளைத்த கயமுகாசுரன்மே
லொற்றைவெண்மருப்பை யொடித்தவனுரத்திற்
குற்றிடவெறிந்தான் குருதிசோர்ந்திடவே
சோர்ந்தவன்வீழ்ந்து துண்ணெனவெழுந்து
வாய்ந்தமூடிகமாய் வந்தவன்பொரவே
வந்தமூடிகத்தை வாகனமாக்கி
யெந்தைவிநாயக னேறினனிப்பா
லெறிந்தவெண்மருப்பங் கிமைநொடியளவிற்
செறிந்ததுமற்றவன் றிருக்கரத்தினிலே
வெல்லவைக்கதிர்வேல் விழிபடைத்தருளும்
வல்லவைதனைத்தன் மனையெனமணந்தே
யோகையோடெழுந்தாங் குயர்படைசூழ
வாகையும்புனைந்து வரும்வழிதன்னிற்
கருச்சங்கோட்டிக் கயல்கமுகேறுந்
திருச்செங்காட்டிற் சிவனையர்ச்சித்துக்
கணபதீச்சுரமெனுங் காரணநாமம்
பணபதிபுகழ்தரு பதிக்குண்டாக்கிச்
சங்கரன்பார்ப்பதி தனிமனமகிழ
விங்குவந்தன்புட னெய்தியபின்னர்க்
கணங்களுக்கரசாய்க் கதிர்முடிசூட்டி
யிணங்கியபெருமைபெற் றிருந்திடவாங்கே
தேவர்கள்முனிவர்கள் சித்தர்கந்தருவர்
யாவரும்வந்திவ னேவல்செய்திடுநா
ளதிகமாயுரைக்கு மாவணித்திங்களின்
மதிவளர்பக்கம் வந்திடுசதுர்த்தியில்
விநாயகற்குரிய விரதமென்றெண்ணி

மனா திகள்களித்து மரபொடுநோற்று
ரிப்படிநோற்றிட் டெண்ணியபெறுநா
ளொப்பரும்விரதத் திறமொருசதுர்த்தியில்
னோற்றுநற்பூசை நடங்காதாற்றிப்
போற்றிசெய்திட்டார் புலவரைங்கரனை
மருமலர்தூவும் வானவர்முன்னே
நிருமலன்குமர னிருத்தம்புரிந்தா
னனைவருங்கைதொழு தடியிணைபோற்ற
வனைகழற்சந்திரன் மனச்செருக்கதனாற்
பேழைபோல்வயிறும் பெருத்தகாத்திரமுந்
தாழ்துளைக்கையுந் தழைமுறச்செவியுங்
கண்டனனகைத்தான் கரிமுகக்கடவுளுங்
கொண்டனன்சீற்றங் *குபேரனைநோக்கி
யென்னைக்கண்டிங் கிகழ்ந்தனைசிரித்தா
யுன்னைக்கண்டவ ருரைக்குமித்தினத்திற்
பழியொடுபாவமும் பலபலவிதனமு
மழிவுமெய்துவரென் றசனிபோற்சபித்தான்
விண்ணவரெல்லா மிகமனம்வெருவிக்
கண்ணருள்கூருங் கடவுளித்தினத்திற்
கோரவெஞ்சினமிகக் கொண்டனனதனால்
மார்கழித்திங்கண் மதிவளர்பக்கஞ்
சதயந்தொட்ட சட்டிநல்விரதமென்
றிதயத்தெண்ணி யாவருநோற்றார்.

இப்புவிமாந்த ரியம்பியவிரதம்
வைப்புடநோற்ற வகையினிச்சொல்வாம்
குருமணிமுடிபுனை குருகுலத்துதித்த
தருமனுமிளைய தம்பியர்நால்வருந்
தேவகிமைந்தன் றிருமுகநோக்கி
யெண்ணியவிரத மிடையூறின்றிப்
பண்ணியபொழுதே பலிப்புண்டாகவுஞ்
செருவினிலெதிர்ந்த செறுநரைவென்று
மருமலர்ப்புயத்தில் வாகைசூடிடவு

*குபேரன்-சந்திரன்

மொந்தத்தெய்வ மெவ்விரதத்தை
வந்தனைசெய்யில் வருநமக்குரையெனப்
பாட்டளிதுதையும் பசுந்துழாய்மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளத்துதலுற்று
ளாக்குநீறணியு மரன்முதலளித்தோன்
விக்கினந்தீர்க்கும் விநாயகமூர்த்தி
யோடவைத்திடும்பொன் னொத்தொளிவிளங்குங்
கோடிசூரியர்போற் குலவியமேனியன்
கடகரிமுகத்தோன் காத்திரம்பெருத்தோன்
றடவரைபோலுஞ் சதுர்ப்புயமுடையோன்
சருவாபரணமுந் தரிக்கப்பட்டவன்
உறுமதிக்குழவிபோ லொருமருப்புடையோ
னொருகையிற்றந்தமு மொருகையிற்பாசமு
மொருகையின்மோதக மொருகையிற்செபஞ்செ
யுத்தமமாலையோ னுறுநினைவின்படி
சித்திசெய்வதனாற் சித்திவிநாயக
னென்றிமையவரு மியாவருந்துதிப்ப
நன்றிதருந்திரு நாமம்படைத்தோன்
புரவலர்காணப் புறப்படும்போதுஞ்
செருவினில்யுத்தஞ் செய்திடும்போதும்
வித்தியாரம்பம் விரும்பிடும்போது
முத்தியோகங்க ளாற்றிடும்போது
மாங்கவன்றன்னை யருச்சனைபுரிந்தாற்
றீங்குறுதெல்லாஞ் செயமுண்டாகுங்
கரதலமைந்துடைக் கணபதிக்குரிய
விரதமொன்றுளதனை விரும்பிநோற்றவர்க்குச்
சந்ததிதழைத்திடுஞ் சம்பத்துண்டாம்
புந்தியினினைத்த பொருள்கைகூடு
மேவலர்தமையும் வென்றிடலாமெனத்
தேவகிமைந்தன் செப்பிடக்கேட்டு
நுவலரும்விரத நோற்றிடுமியல்பும்
புகர்முகக்கடவுளைப் பூசைசெய்விதமும்
விரித்தெமக்குரைத்திட வேண்டுமென்றிரப்ப
வரைக்குடைகவித்தோன் வகுத்துரைசெய்வான்

தேருநீராவணித் திங்களின்மதிவளர்
பூருவபக்கம் புணர்ந்திடுசதுர்த்தியின்
முந்தும்புலரியின் முறைநீர்படிந்து
சந்திவந்தனந் தவறுதாற்றி
யத்தினமதனி லைங்கரக்கடவுளைப்
பத்தியோடர்ச்சனை பண்ணுதல்வேண்டும்
வெள்ளியாற்பொன்னால் விளங்குமங்கவன்ற
னொள்ளியவருட்டிரு வுருவுண்டாக்கிப்
பூசனைபுரியப் புகன்றனர்பெரியோ
ராசிலாமண்ணா லமைத்தலுந்தகுமாற்
பூசைசெய்திடுமிடம் புனிதமாக்கி
வாசமென்மலரின் மஞ்சரிதூக்கிக்
கோடிகங்கோசிகங் கொடிவிதானித்து
நீடியநூல்வளை நிறைகுடத்திருத்தி
விந்தைசேர்சித்தி விநாயகனுருவைச்
சிந்தையினிணைந்து தியானம்பண்ணி
யாவாகனமுத லர்க்கியபாத்தியம்
வாகாராசம னம்வரைகொடுத்தே
யைந்தமிர்தத்தா லபிடேகித்துக்
கந்தஞ்சாத்திக் கணேசமந்திரத்தா
லீசுரபுத்திர னென்னுமந்திரத்தான்
மாசகலிரண்டு வத்திரஞ்சாத்திப்
பொருந்துமைசுதனைப் புகலுமந்திரத்தாற்
றிருந்தும்பளிதத் தீபங்கொடுத்துப்
பச்சறுகுடனிரு பத்தொருவிதமாப்
பத்திரபுட்பம் பலபலகொணர்ந்தே
உமாசுதன்கணாதிப னுயர்கரிமுகத்தோன்
குமாரகுரவன் பாசாங்குசகர
னேகதந்த னீசுரபுத்திர
னாகுவாகன னருடருவிநாயகன்
சர்வகாரியமுந் தந்தருள்புரிவோ
னேரம்பமூர்த்தி யென்னுநாமங்களா
லாரம்பத்துட னர்ச்சனைபண்ணி
மோதகமப்ப முதற்பணிகாரந்

தீதகன்மாங்கனி தீங்கதலிப்பழம்
வருக்கைகபித்த மாதுளங்கனியொடு
தரித்திடுநெட்டிலைத் தாழைமுப்புடைக்காய்
பருப்புநெய்பொரிக்கறி பாறயிர்போனகம்
விருப்புளசுவைப்பொருள் மிகவுமுன்வைத்தே
யுருத்திரப்பிரியவென் றுரைக்குமந்திரத்தால்
நிருத்தன்மகற்கு நிவேதனங்கொடுத்து
நற்றவர்புகன்றநா னான்குபசாரமு
மற்றவன்றிருவுள மகிழ்ந்திடச்செய்தே
யெண்ணுந்தகுதி யிருபிறப்பாளர்க்
குண்ணறுசுவைசே ரோதனநல்கிச்
சந்தனமுத்துத் தானந்தக்கிணை
யந்தணர்க்கீந்திட் டருச்சகன்றனக்குத்
திருத்தகும்விநாயகத் திருவுருவத்தைத்
தரித்தவத்திரத்துடன் றானமாக்கொடுத்து
நைமித்திகமென நவிறருமரபா
லிம்முறைபூசனை யாவர்செய்தாலு
மெண்ணியகருமம் யாவையுமுடிப்பர்
திண்ணியசெருவிற் செயமிகப்பெறுவ
ரானிவன்றன்னைமுன் னர்ச்சனைபண்ணிப்
புரமொருமூன்றும் பொடிபடவெரித்தா
னுருத்திரனிவனை யுபாசனைபண்ணி
விருத்திராசுரனை வென்றுகொன்றிட்டா
னகலிகையிவன்று னர்ச்சனைபண்ணிப்
பகர்தருங்கணவனைப் பரிவுடனடைந்தாள்
தண்ணார்மதிமுகத் தாடமயந்தி
யந்நாளிவனை யர்ச்சனைபண்ணி
நண்ணார்பரவு நளனையடைந்தா
ளோங்காரக்கடவுளை யர்ச்சனைபண்ணி
வெங்கதநிருதரை வேரறக்களைந்து
தெசரதன்மைந்தன் சீதையையடைந்தான்
பகீரதனென்னும் பார்த்திவனிவனை
மகிதலந்தன்னின் மலர்கொடர்ச்சித்து
வானதிதன்னை வையகத்தழைத்தான்

அட்டதேவதைகளு மர்ச்சித்திவனை
யட்டபோகத்துட னமிர்தமும்பெற்றார்
உருக்குமணியெனு மொண்டொடிதன்னைச்
செருக்கொடுவவ்விச் சிசுபாலன்றான்
கொண்டுபோமளவிற் குஞ்சரமுகவனை
வண்டுபாண்மிழற்று மலர்கொடர்ச்சித்துத்
தாரியின்மறித்தவன் றனைப்புறங்கண்டு
யாமுமங்கவளை யின்புறப்பெற்றோம்
புகர்முகக்கடவுளைப் பூசனைபுரிந்து
மிகமிகமனத்தில் விழைந்தனபெற்று
ரிப்புவிதன்னி லெண்ணுதற்கரிதா
லப்படிநீவிரு மவனையர்ச்சித்தா
லெப்பொருள்விரும்பினீ ரப்பொருள்பெறுவீ
ரென்றுகன்றெறிந்தோ னெடுத்திவையுரைப்ப
வன்றுமுற்றருமனு மனுசருமிவனைப்
பூசனைபுரிந்து* கட் புலனிலான்மைந்தரை
நாசனம்பண்ணி நராதிபராகிச்
சிந்தையினினைந்தவை செகத்தினிற்செயங்கொண்
டந்தமில்செல்வத் தாசியல்பெற்றார்.

ஈங்கிதுநிற்க விவ்விரதத்திய
லோங்கியகாதைமற் றொன்றுரைசெய்வாங்
கஞ்சநான்முகன் றருங் காசிபன்புணர்ந்த
வஞ்சகமனத்தாள் மாயைதன்வயிற்றிற்
சூரனென்றொருவனுந் துணைவருந்தோன்றி
யார்கலிசூழ்புவி யனைத்தையுமளித்தே
சீருடைச்சுவர்க்கத் திரவளங்கெடுத்தும்
புரந்தரன்முதலிய புலவரைவருத்தியும்
நிரந்தரந்தீய நெறிநடத்துதலா
லாயிரங்கண்ணனு மமரருமுனிவரு
நீயிரங்கெமக்கென நெடுங்கரங்கூப்பி
யிரசதகிரியுறை யிறைவனை வணங்கி
வாமிகுஞ்சூரன் வலிமைகளுரைக்கச்

*கட்புலனிலான் - திருதராட்டிரன்.

சுடர்விடுமணிமுடிச் சூரனைவெல்லக்
கதிர்விடுவடிவேல் கரதலத்தேந்தும்
புதல்வனைத்தருவோம் போமினீரென
வமரர்கோனுக் கரன்விடைகொடுத்துச்
சமரவேல்விழித் தையலுந்தானுங்
கூடியகலவியிற் கூடாதூடலு
போடியவாறே ரொருங்குடன்கூடிப்
பாவகன்றன்னைப் பரிவுடனழைத்துச்
சூரன்செய்யுந் துயரமெல்லா
மூசரவணிந்தோற் குரையெனவுரைப்பக்
காமனையெரித்த கடவுளென்றஞ்சிப்
பாவகன்பயமுறப் பயமுனக்கேதவ
னுற்றிடுங்கரதலத் துன்னையேதரித்தா
னெற்றியினயனமு நீயேயாதலிற்
குற்றமடாது கூறுநீசென்றென
வானவர்மொழிய மற்றவன்றானுங்
தானுமச்சபையிற் றரியாதேகி
பெண்மையாளுடைய வுமையாளுடனே
யமையாவின்பத் தமர்ந்தினிதிருந்த
பள்ளிமண்டபம் பாவகன்குறுகலு
மொள்ளியமடந்தை யொதுங்கினாளதலுந்
தெள்ளிதிற்பரமனுந் தேயுவைக்கண்டே
யறுமுகப்பிள்ளையை யவன்கையிலீதலும்
வறியவன்பெற்ற வான்பொருள்போலச்
சோதிநீண்முடிச் சுடரோன்கொணர்ந்து
வாதராசன் மலர்க்கையிற்கொடுப்ப
நீதியோடு நின்றுகையேந்திப்
போதநீள்வாயுவும் பொறுக்கவொண்ணாமற்
றரும்புனற்கங்கை தன்கையிற்கொடுப்பத்
தரும்புனற்கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச்சரவணப் பொய்கையில்வைப்பத்
தண்ணார்வதனத் தாமரையாறுங்
கண்ணிரண்டுங் கரமீராறுந்
தாளிணைத்திரண்ட தோளீராறு

மாணயிலாதி வான்படையுங்கொண்
டறுமுகக்கடவுளங் கவதரித்திடலு
மறுகியவும்பர் மகிழ்ந்துடன்கூடி
யறுமீன்களைப்பா லளித்திடென்றனுப்ப
வாங்கவர்முலையுண் டறுமுகன்றனு
மோங்கியவளர்ச்சி யுற்றிடுநாளில்
விமலனுமுமையும் விடையுகைத்தாறு
தலைமகனிருந்த சரவணத்தடைந்து
முருகலர்குழலுமை முலைப்பாலூட்ட
விருவருமின்பா லெடுத்தெடுத்தணைத்துத்
தேவர்தம்படைக்குச் சேனைபதியெனக்
காவல்கொண்டளிக்கக் கதிர்முடிசூட்டி
யயில்வேன்முதற்பல வாயுதங்கொடுத்துத்
திசையெலாஞ்செல்லுந் தேருமொன்றுதவிப்
பூதப்படைகள் புடைவரப்போய்நீ
யோதுறுமவுணரை யொறுத்திடென்றனுப்ப
விருளைப்பருகு மிரவியைப்போலத்
தகுவரென்றவரைச் சமரிடைமுருக்கிக்
*குருகுப்பேர்பெறுங் குன்றமுஞ்சூரன்
மருமமுந்துளைபட வடிவேல்விடுத்தே
யாவரும்வியப்புற விந்திரன்மகளாந்
தேவகுஞ்சரியைத் திருமணம்புணர்ந்திட்
டமரர்கோனுக் கமருலகளித்துக்
குமரவேளுங் குவலயம்விளங்க
வமராவதியி லமர்ந்தினிதிருந்தான்
சமரவேலுடைச் சண்முகன்வடிவுகண்
டமரர்மாதரனைவருமயங்கி
யெண்டருங்கற்பினை யிழந்ததுகண்டே
யண்டரெல்லா மடைவுடன்கூடி
மாதொருபாகனை வந்தடிவணங்கி
மருமலர்க்கடம்பனெம் மாநகர்புகாம
லருள்செயவேண்டுமீ யம்பிகாபதியென
விமையவருரைப்ப விறையவன்றனுங்

---

*குருகுப்பேர்பெறுங்குன்றம்-கிரவுஞ்சமலை.

ரவ்வைமீண்டுதன் னகமதிற்சென்றே
யிவ்வகைக்கன்னிநீ யாரெனவினவக்
காத்தாண்டுலகு கருணையோடாண்ட
மார்த்தாண்டராசன் மகள்நானொருத்தி
யெல்லார்க்குமூத்தா ளிலக்கணசுந்தரி
சொல்லுவிக்கிரம சூரியன்மனையெனச்
சீர்கெடவிருந்த தெரிவையைநோக்கி
நீரதுகொண்டு நிலமெழுகிடுகெனச்
சாணியெடுக்கத் தையலுஞ்சென்றாள்
சாணியுமுழுத்தாத் தண்ணீர்வற்றிப்
பேணியபுழுவாய்ப் பெரிதுதோன்ற
மானேர்விழியாள் வருந்துதல்கண்டு
தானேசென்று சாணியெடுத்துத்
தண்ணீர்கொண்டு தரைமெழுக்கிட்டு
மண்ணியவீட்டின் மணிவிளக்கேற்றிப்
புத்தகமெடுத்து வாவெனப்புகலப்
புத்தகம்பாம்பாய்ப் பொருந்திநின்றிட
மெத்தவுண்ணடுங்கி வீழ்ந்தவள்கிடப்பக்
கொவ்வையங்கனிவாய்க் கோதையைவிலக்கி
யவ்வைதானே யகமதிற்சென்று
புத்தகமெடுத்துப் பொருந்தப்பார்த்து
வித்தகநம்பி விநாயகமூர்த்தி
கற்பகப்பிள்ளைசெய் காரியமிதுவென
வுத்தமியவ்வை யுணர்ந்துமுன்னறிந்து
தவநெறியிழைத்த தையலைநோக்கி
நாவலரும்விநாயக னோன்புநோற்றிடுகெனக்
கரத்துமேழிழைக் காப்புக்கட்டி
யப்பமுமவலு மாம்பலபண்டமுஞ்
செப்பமதாகத் திருமுன்வைத்தே
யவ்வைகதைசொல வாயிழைகேட்டு
மத்தகக்களிற்றின் மகாவிரதத்தை
வித்தகமாக விளங்கிழைநோற்றுக்
கற்பகநம்பி கருணைபெற்றதற்பின்
சக்கிரவாள சைனியத்தோடு

விக்கிரமாதித்தன் வேட்டையிற்சென்று
தானுஞ்சேனையுந் தண்ணீர்விரும்பி
யெவ்வகைசெய்வோ மெனவுளமெலிந்தே
யவ்வைதன்மனை யங்கவ ணுக
வெய்துந்தாகமு மிளைப்புங்கண்டு
செவ்வேயவற்றைத் தீர்க்கவெண்ணி
யிலக்கணசுந்தரி யென்பவடன்னை
யப்பழுநீரு மரசற்கருளெனச்
செப்பியவன்னை திருமொழிப்படியே
யுண்ணீர்க்கரகமு மொருபணிகாரமும்
பண்ணேர்மொழியாள் பார்த்திபற்குதவ
வொப்பறுபடையு முயர்படைவேந்தனு
மப்பசிதீர வருந்தியபின்ன
ரானைகுதிரை யவைகளுமுண்டுந்
தானதுதொலையாத் தன்மையைக்கண்டே
யிவ்வகைசமைத்தநீ யாரெனவினவ
மவ்வலங்குழலாள் மௌனமாய்நிற்ப
வவ்வைதான்சென்றங் கரசர்க்குரைப்பாள்
கணபதிநோன்பின் காரணங்காணிது
குணமுடையிவளுன் குலமனையாட்டி
யிலக்கணசுந்தரி யென்றவைகூற
மங்கையைநோக்கி மனமிகமகிழ்ந்து
திங்கணேர்வெள்ளிச் சிவிகையினேற்றிக்
கொண்டூர்புகுந்தான் கொற்றவேந்தனு
மொண்டொடியாரி லுயர்பதமுதவினன்
சிந்துர நுதலார் சென்றடிபணியச்
சுந்தரியிருந்தாள் சுகத்துடன்மகிழ்ந்தே.

---

## போற்றித்திருவகவல்.

அருள்புரிந்தருளு மாசேபோற்றி
யிருவினைதுடைக்கு மிறைவாபோற்றி
மறைமுனியொருவன் மாங்கனிகொணர்ந்து
நறைமிடற்றிறைவன் கையிற்கொடுப்ப

பாசாங்குசங்கை பரித்தாய்போற்றி
தேசார்மணிமுடித் தேவேபோற்றி
யெழுநரகெழுபிறப் பறுப்பாய்போற்றி
யெழுமையுமெமக்கன் கிரங்குவாய்போற்றி
துளைபெறிவக்கிர துண்டாபோற்றி
வளநிகரொற்றை மருப்பாபோற்றி
வரமிகுமரி திரு மருகாபோற்றி
சுரர்தொழுமுருகன் றுணைவாபோற்றி
நல்லவர்புகழு நம்பாபோற்றி
வல்லபைக்குரிய மணாளாபோற்றி
கயமுகத்தவுணனைக் காய்ந்தாய்போற்றி
வயமிகுமூஷிக வாகனாபோற்றி
யோங்காரத்தனி யுருவேபோற்றி
நீங்காக்கருணை நிமலாபோற்றி
துறவர்தமக்கொரு துணைவாபோற்றி
முறநிகர்தழைசெவி முதல்வாபோற்றி
அண்டமாமதிபோற் றுலங்கியகோட்டைக்
கண்டகமாகக் கைதனிற்பிடித்துப்
பண்டுபாரதப் பழங்கதைபசும்பொன்
விண்டுவில்வரைந்த விமலாபோற்றி
போற்றிபோற்றியுன் பொற்பதம்போற்றி.

---

## வருக்கக்கோவை.

அன்புடைக்கடவுளர்க் கதிபதிசெயசெய
ஆபத்தகற்று மைங்கரசெயசெய
இந்துச்சடைமுடி யிறைவாசெயசெய
ஈசன்பெற்ற எம்மான்செயசெய
உன்னியமுடிக்கு மொருவாசெயசெய
ஊர்மனைசந்தி யுகந்தாய்செயசெய
எம்பெருமானே யேகனேசெயசெய
ஏழுலகுந்தொழ விருப்பாய்செயசெய
ஐயாகணங்கட் காதிசெயசெய
ஒற்றைமருப்பை யுடையாய்செயசெய
ஓங்கியகரிமுக முற்றாய்செயசெய

வேலனுநீயும் விரும்பிமுன்னிற்ப
வொருநொடியதனி லுலகெலாம்வலமாய்
வருமவர்தமக்கு வழங்குவோம்யாமென
விரைவுடன்மயின்மிசை வேலோன்வருமுன
ரரனைவலம்வந் தக்கனிவாங்கிய
விரகுளவிக்கின விநாயகபோற்றி
முன்னடிதெரியா முதல்வனைப்போற்றிப்
பின்னடிதெரியாப் பெருங்கவிப்பெருமான்
மண்மிசைவைத்துனை வாவியிற்செல்லக்
கண்ணிலானிவனெனக் கரந்தவன்போகக்
கரைமிசையேறிக் காணு திரங்கி
யுரைதடுமாறி யுள்ளங்கலங்கிக்
கூகூகணபதி கூகூவென்னக்
கூகூவென்றருள் குன்றேபோற்றி
யப்பணிசடையோன் முப்புரமெரிக்க
விப்புவியதனை யிரதமாக்கித்
தினகரன்மதிதேர்ச் சில்லியாகப்
பொருவருமறைகளே புரவியாகச்
சங்கைசேர்நான்முகன் சாரதியாகப்
பங்கயக்கண்ணன் பகழியாக
மலைசிலையாக வாசுகிநாணு
நிலைபெறநிற்கு நெடுந்தேர்தன்னில்
விக்கினந்தீர்க்கும் விநாயகநமவெனச்
சிக்கெனவிறைவன் செப்பாதேறலிற்
றச்சுறச்சமைத்த தகைமலிநெடுந்தே
ரச்சறுத்தருளு மரசேபோற்றி
வேதப்பொருளாம் விமலாபோற்றி
பூதப்படையுடைப் புனிதாபோற்றி
கரமைந்துடைய களிறேபோற்றி
பரமன்பயந்த பாலாபோற்றி
யகிலமீன்றரு ளம்மைதனக்குத்
திருமகனாகிய செல்வாபோற்றி
யற்றவர்க்கருள்புரி யரசேபோற்றி
கற்றவர்மனதிற் காண்பாய்போற்றி

குமரனைக்கோப
காவல்கொண்டெ … றுததருளுஞ்
சேவலங்கொடி … ன றேசம்போகத்
திருந்திழையுமையா ளருந்துயரெய்தி
வருந்திமுன்னிற்க மங்கையைப்பார்த்து
மங்கைநீதான் வருந்துதலொழிகுதி
யங்கையாற்சூதெறிந் தாடுவோம்வாவென
வென்றதுந்தோற்றதும் விளம்புவார்யாரெனக்
குன்றமென்முலையாள் கூறியசமயம்
புற்றரவணிந்த புனிதனைக்காணவங்
குற்றனன்றிருமா லூழ்வினைவலியாற்
சக்கிரபாணியைச் சான்றெனக்குறித்து
மிக்கதோர்சூது விருப்புடனாடச்
சாயகநேருந் தடநெடுங்கருங்க
ணாயகிவெல்ல நாயகன்றோற்ப
வின்பவாயிதழுமை யான்வென்றேனென
வெம்பெருமானும் யான்வென்றேனென
வொருவர்கொருவ ருத்தரம்பேசி
யிருவருஞ்சாட்சி யிவனைக்கேட்ப
மாமனைவதைத்த மான்முகநோக்கிக்
காமனையெரித்தோன் கட்கடைகாட்ட
வென்றநாயகி தோற்றாளென்றுந்
தோற்றநாயகன் வென்றானென்று
மொன்றியபொய்க்கரி* யுடனங்குரைப்பக்
கன்றியமனத்தொடு கவுரியங்குருத்து
நோக்கிநீயிருந்து நுவன்றிலையுண்மை
வாக்கினிலொன்றாய் மனத்தினிலொன்றாய்
மைக்கரியுரித்தோன் வதனநோக்கிப்
பொய்க்கரியுரைத்த புன்மையினாலே
கனலெனவயிற்றிற் கடும்பசிகனற்ற
நிலமிசைக்குருட்டு நெட்டுடற்பாம்பாய்க்
கடகரிமுகத்துக் கடவுள்வீற்றிருக்கும்
வடதருநீழலிற் கிடவெனச்சபித்தாள்

---

*கரி-சாட்சி.

ை த.

முள்ள… …ப்போய்த்
துளவணிமருகனு… …ழந்தே
யாண்டரைக்கணத்தி லாயிர… …பாசனை
நீண்டவைப்பாந்த ணெட்டுடலெடுத்து
வளர்மருப்பொன் றுடை வள்ளல்வீற்றிருக்குங்
கிளர்சினையாலின் கீழ்க்கிடந்ததனால்
திரிகடகரியின் றிருமுகக்கடவுளும்.
வழிபடுமடியார் வல்வினைதீர்த்தே
யெழில்பெறுவடமரத் தின்கீழிருந்தான்
கம்பமாமுகத்துக் கடவுடன்பெருமையை
யம்புவியோருக் கறிவிப்போமென
வும்பருலகத் தோரெழுகன்னியர்
தம்பநூலேணியிற் றரணிவந்து
கரிமுகக்கடவுளைக் கைதொழுதேத்திக்
கார்த்திகைக்கார்த்திகை கழித்தபின்னுளி
லார்த்தகலிங்கத் தனியிழைவாங்கி
யிருபத்தோரிழை யின்புறக்கட்டி
யொருபோதுண்டி யுண்டொருமனமாய்
வேதத்தாதியும் பூமியிலெழுத்து
மாதிவிநாயகற் கானவெழுத்து
மூன்றெழுத்ததனை மொழிந்தமந்திரமுந்
தேன்றருங்குழலியர் சிந்தையுட்செபித்தே
யுரைதருபதினா றுபசாரத்தால்
வரைமகண்மதலையை வழிபாடாற்றி
யிருபதுநாளு மிப்படிநோற்று
மற்றைநாளங்கர மாமுகன்பிறந்த
தற்றைநாட்சதயமு மாரும்பக்கமுஞ்
சேருமத்தினத்திற் றெளிபுனலாடி
வாரணமுகத்தோன் வதிபெருங்கோயில்
சீர்பெறமெழுகித் திருவிளக்கேற்றிக்
குலவுபொற்கலைகள் கொடிவிதானித்து
…லர்பலதொடுத்திடு மாலைகளுற்றிக்
…காலைபுரிவடிவேற் குகற்குமுன்வருகை
…முகக்கடவுளை மஞ்சனமாட்டிப்

மூன்றுமண்டலத்தின் முட்டி
நான்றெழுவாயி னுவிலுணர்த்துக
குண்டலிதன்னைக் கூறுமியல்பை
விண்டெழுமந்திரம் விழைவுறச்செப்பி
மூலாதார மூண்டெழுகனலைக்
காலாலெழுப்பிக் கருத்தறிவித்தே
யமுதகலசமு மலரியியக்கமுங்
குமுதசகாயக் குணத்துடன்காட்டி
யிடைச்சக்கரத்தி னெட்டுநிலையோ
டெற்சக்கரத்தி னுயிர்ப்பையுங்காட்டிச்
சண்முகச்சூலமுஞ் சதுர்முகச்சுட்டியு
மெண்முகமாகிய வெண்பதொன்றிடமும்
புரியட்டகாயமும் புலப்படவெனக்குத்
தெரியெண்ணிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்திலிருத்திக் கபாடங்காட்டித்
திருத்திமுத்தி சித்தியெற்கருளி
யென்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னைப்பழவினை முதலறக்களைந்து
வாக்குமனமு மில்லாமனோலயந்
தேக்கியெனக்குச் சிந்தைதெளித்தே
யிருவினைதனக்கு மியைபுறநின்ற
கருவினைவாராக் கருத்தறிவித்தே
யெல்லையில்லாத்தோ ரின்பினையருளி
யல்லல்களைந்திட் டருள்வெளியாக்கிச்
சித்தத்துட்சிவ லிங்கங்காட்டிச்
சத்தத்துள்ளே சதாசிவங்காட்டி
யணுவுக்கணுவா யப்பாற்கப்பாற்
கணுவுறநின்று கருணையுங்காட்டி
வேடமுநீறும் விளங்கநிறுத்திக்
கூடகத்தொண்டர் குழாத்துடன்வாழ
வஞ்சக்கரத்தி னருள்புரிவித்து
நெஞ்சக்கருத்தி னிலைபுகுவித்தே
தத்துவநிலையுந் தந்தெனையாண்ட
வித்தகவிநாயகன் விரைகழற்சரணக்

...ர கதை...

...ார் தினர்
பொருளொடு தவமும் புகழும்பெறுவரே.

---

## நூற்பயன்.

பொன்னுமிகுங் கல்விபுகும் புத்திரரோ டெப்பொருளு
மன்னு நவமணியும் வந்தணுகு—முன்னி
யொருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை மூக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி னோன்பின் கதைதன்னைச்—சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளையெரு தேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை—யுள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலியார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவர்
சாலமிகும் வெங்கலியார் தானோற்கில்—மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**பிள்ளையார்கதை முற்றுப்பெற்றது.**

**திருச்சிற்றம்பலம்.**

---

பொற்கலைநன்னூற் பூந்துகில்சா
சொற்பெறுசந்தனச் சுகந்தம்பூசிச்
செருந்திசண்பகஞ் செங்கழுநீரொடு
குருந்துமல்லிகை கோங்கொடுபிச்சி
கருமுகைபுன்னை கடிகமழ்பாதிரி
மருவிரிஞாழன் மகிழிருவாட்சி
தாமரை முல்லை தழையவிழ்கொன்றை
பூமலர்நொச்சி பூத்தமைக்குவளை
காந்தளாத்தி கடம்புசெவ்வந்தி
வாய்ந்தநல்லெருக்கு மலர்க்கரவீரம்
பச்சிலைநொச்சி படர்கொடியறுகு
முத்தலைக்கூவிள முதலியசாத்தித்
தூபதீபங்கள் சுகம்பெறக்கொடுத்தே
யப்பமோதக மவலெள்ளுண்டை
முப்பழந்தேங்காய் முதிர்மொழிக்கரும்பு
சீனிதேன்சர்க்கரை செவ்விளநீருடன்
பானறுநெய்தயிர் பருப்புடன்போனகங்
கற்பகக்கடவுள் களித்திடத்திருமுன்
பொற்புறப்படைத்துப் பூசனைபண்ணி
நோற்பதுகண்டு நோலாதிருந்த
பாப்புருவாகிய பஞ்சாயுதனும்
யாப்புறுகொங்கையீர் யானுநோற்பேனென
வாங்கவன்றனக்கும் வேண்டுவதளித்துப்
பாங்கொடிவ்விரதம் பரிந்துநோற்பித்தா
ரண்டர்நாயகனு மைங்கரனருளால்
விண்டுவும்பண்டுள வேடம்பெற்றே
யுஞ்சைமாநகர்புகுந் தாமையொர்டுவிமலன்
கஞ்சநாண்மலர்ப்பதங் கைதொழுதிடலும்
பஞ்சிமென்சீறடிப் பார்ப்பதிநெஞ்சின்
வெஞ்சினமிகுந்து விமலனைநோக்கி
யானிடுஞ்சாப நீங்கியதேதென
மானெடுங்கண்ணி மணிக்கதவடைப்ப
விறையவனிதற்குக் காரணமேதென
மறிகடற்றுயிலு மாயவனுரைப்பான்

ன்றுடைப் பிள்ளையென் றனக்குத்
தந்தருள்புரிந்த தவப்பயனீதெனச்
சிந்தைமகிழ்ந்து தேவர்தேவனும்
பூங்கொடியடைத்த பொற்றாழ்நீங்கச்
சாங்கமுன் னுரைத்த சக்கிரபாணி
யிக்கதைசொல்ல வக்கணிசடையனு
மிக்கநல்விரதம் விருப்புடனோற்றபின்
மாதுமையடைத்த வன்றாழ்நீக்கி
நாதனைநணுகிட நம்பனுநகைத்தான்
நானோவந்த நகையானதுவெனத்
தேனேர்மொழியா டெளியக்கூறென
நன்மதிநுதலாய் நானிலந்தன்னி
லுன்மகனோன்பி னுறுதியறிந்து
சிந்தைமகிழ்ந்து சிரித்தேன்யானென
வந்தமிலரனை யாயிழைவணங்கிப்
பொருஞ்சூரறவேல் போக்கியகுமரன்
வரும்படியானும் வருந்திநோற்பேனென
விறையவன்கதைசொல வேந்திழைநோற்றபின்
குறமடமகளைக் குலமணம்புணர்ந்தோன்
சுடர்வடிவேலோன் றொல்வினைதீர்ந்து
தாதுமைவண்டுழுந் தாமத்தாமனை
மாதுமையாளை வந்துகண்டனனே
கண்ணநீகண்ணிலாக் கட்செவியாகெனத்
தண்ணறுங்குழலுமை சாபமிட்டதுவு
மக்குநீறணியு மான்முதலளித்த
விக்கினவிநாயகன் விரதநோற்றதன்பின்
சுடர்க்கதையேந்துந் துளவமாலையன்
விடப்பணியுருவம் விட்டுநீங்கியதும்
பவுரிகொள்கூத்துடைப் பரமனுநோற்றுக்
கவுரியன்றடைத்த கபாடந்திறந்ததும்
வாசமென்குழலுடை மாதுமைநோற்பத்
தேசம்போகிய செவ்வேள்வந்ததும்
வானவர்நோற்று வரங்கள்பெற்றதும்
நாரதமுனிவ னவின்றிடக்கேட்டே

யிந்நிலந்தன்னி லிவ்விரத[...]
மன்னவன்வச்சி ரமாலிமுன்னோற்று[...]
காயத்தெழுந்த கடும்பிணிதீர்த்து
மாயிரும்புவியின் மன்னனாய்வாழ்ந்து
தடமுலைத்திலோத்தமை தனைமணம்புணர்ந்து
மழவிடைபோற்பல மைந்தரைப்பெற்றுக்
கடைமுறைவெள்ளியங் கயிலையிலுற்றான்
பரிவொடிவ்விரதம் பாரகந்தன்னில்
விரைகமழ்நறுந்தார் விக்கிரமாதித்தன்
மறிகடற்புவிபெற வருந்திநோற்றிடுநாள்
மற்றவன்காதன் மடவரலொருத்தி
யிற்றிடுமிடையாளிலக்கணசுந்தரி
மெத்தவன்புடனிவ் விரதநோற்பேனென
வத்தந்தன்னி லணியிழைசெறித்துச்
சித்தமகிழ்ந்து சிலநாளோற்றபி
னுற்றநோன்பி னுறுதிமறந்து
கட்டியவிழையைக் காரிகையவிழ்த்து
வற்றியகொவ்வையின் மாடேபோட
வாங்கதுதழைத்தே யலருந்தளிருமாய்ப்
பாங்குறவோங்கிப் படர்வதுகண்டு
வேப்பஞ்சேரியிற் போய்ச்சிறையிருந்த
பூப்பயில்குழல்சேர் பொற்றொடியொருத்தி
யவ்வியமில்லா ளவ்விடந்தன்னிற்
கொவ்வையடகு கொய்வாள் குறுகி
யிழையதுகிடப்பக் கண்டவளெடுத்துக்
குழைதவழ்வரிவிழிக் கோதைகைக்கட்டி
யப்பமொடடைக்கா யவைபலவைத்துச்
செப்பமுடனே திருந்திழைநோற்றிடக்
கரிமுகத்தண்ணல் கருணைகூர்ந்து
பண்டையிலிரட்டி பதமவட்கருளக்
கொண்டுபோயரசனுங் கோயிலுள்வைத்தான்
விக்கிரமாதித்தன் விழிதுயில்கொள்ள
வுக்கிரமான வுடைமணிகட்டித்
தண்டையுஞ்சிலம்புந் தாளினின்றொலிப்பக்

...றுங் குஞ்சரமுகத்தோன்
...வகு மன்னன்றன்னிடங்
கனவினில்வந்து காரணமாக
விலக்கணசுந்தரி யிம்மனையிருக்கிற்
கலக்கம்வந்திடுங் கழித்திடுபுறத்தெனத்
துண்ணெனவெழுந்து துணைவியைநோக்கிக்
கண்ணுறக்கண்ட கனவின்காரண
மண்ணலுரைத்திடு மவ்வழிதன்னி
லானைகுதிரை யவைபலமடிவுற
மாநகர்கேடுறும் வகையதுகண்டே
யிமைப்பொழுதிவளிங் கிருக்கலாகாதென
வயற்கடையவனு மகற்றியபின்னர்
வணிகன்றனது மனைபுகுந்திருப்ப
மணியுமுத்தும் வலியகல்லாய்விட
வணியிழைதன்னை யவனுமகற்ற
வுழவர்தம்மனையி லுற்றவளிருப்ப
வளர்பயிரழிந்து வளம்பலகுன்ற
வயன்மனையவரு மகற்றியபின்னர்க்
குயவன்மனையிற் கோற்றொடிசெல்லக்
குயக்கலமுடைந்து கொள்ளைபோக
வயற்கடையவனு மகற்றியபின்னர்த்
தாசுதாய்தாக்குக் தொழிலோர்மனைபுகத்
தாசுகளெல்லாந் துணிந்துவேறுகத்
தாசருமவளைத் தாரஞ்செய்ய
மாலைக்காரன் வளமனைபுகலு
மாலைபாம்பாம் வகையதுகண்டு
ஞாலமெல்லா நடுங்கவந்துதித்தாய்
சாலவும்பாவிநீ தான்யாரென்ன
வெம்மனமிகவு மேவிழுனிவுறு
வம்மனையவனு மகற்றியபின்ன
ரவ்வைதன்மனை யவள்புகுந்திருப்ப
வவ்வைசெல்ல வகங்கடோறும்
வைதனரெறிந்தனர் மறியத்தள்ளினர்
கைகொடுகுற்றினர் கண்டோர்பழித்தன